**<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்</u>**

**<u>அ.வ.எண்.306/2024</u>**

2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 09–ம் நாள் திங்கள்கிழமை **பி.வா.சா.1**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சண்முகசுந்தரம் | தொழில் | விவசாயம் |
| த/பெ | கந்தசாமி | கிராமம் | படியூர் |
| வயது | 47 | தாலுகா | காங்கயம் |
| | | மாவட்டம் | திருப்பூர் |

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு விபரங்கள் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். நான் வழக்குரையை படித்துப் பார்த்தேன். வாதி பூமி தனக்கு இருக்கிறது என்று வழக்கு தாக்கல் செய்தார். வாதி பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். எனக்கு வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை விவரங்கள் தெரியாது என்றாலும் யாரோ சொன்ன விபரங்களை வைத்து மோசடியான எதிர் வழக்கு நடத்தி வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. பூமியின் தாவா சொத்தின் சர்வே எண். 394/2 ஆகும். மேற்படி நிலத்தின் மொத்த விஸ்தீரணம் எனக்கு தெரியாது. சர்வே எண் 394/2 காலையில் கட்டுப்பட்ட நிலங்கள் வாதிக்கு சொந்தமானது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. அதன் மொத்த விஸ்தீரணம் 2 ஏக்கரா 6 சென்ட் என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. வாதியிடமிருந்து 1–ம் பிரதிவாதி ஒரு ஏக்கர் நிலத்தை கிரயம் பெற்றுள்ளார் என்று சொன்னால் சரிதான். அவரிடமிருந்து தான் நான் மேற்படி பூமியை கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். 1–ம் பிரதிவாதியிடமிருந்து நான் ஒரு ஏக்கர் நிலத்தை மட்டும் தான்

திறன் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு மேற்படி ஒரு ஏக்கர் நிலத்தில் மட்டும்தான் உரிமை உள்ளது என்றால் சரிதான்.

2. சர்வே எண் 394/2 நிலம் முக்கோண வடிவத்தில் உள்ளது என்றால் சரிதான் மேற்படி நிலத்தில் செக்குபந்தி கண்டு தான் 1–ம் பிரதிவாதியும் நானும் கிரையம் பெற்றோம் என்றால் சரிதான். மேற்படி நிலத்தில் கிழக்குப் பகுதியில் தாவா சொத்து அமைந்துள்ளது. நானும் 1–ம் பிரதிவாதியும் மேற்படி சொத்தை கிரையம் பெரும்போது அளந்து பார்த்து தான் வாங்கினோம். அரசு சர்வேயர் மூலமாக மேற்படி சொத்தை அளந்து சரி பார்த்தோம் ஆனால் ஆவணங்கள் எதுவும் இல்லை. நான் மேற்படி சொத்தை அளந்து பார்க்கவில்லை என்றாலும் அவ்வாறு அளந்திருந்தால் அது குறித்து ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. நான் மேற்படி சொத்தை கிரையம் பெற்றதற்கு பிறகு அதை அளந்து பார்த்து உட்பிரிவு செய்தேனா என்றால் இல்லை. நான் இப்படி சொத்தை கிரையம் பெறும் போது அதன் பட்டா எனக்கும் வாதிக்கும் கூட்டு பட்டாவாக இருந்தது என்று சொன்னால் நிறைய பேருக்கு கூட்டு பட்டாவாக இருந்தது. நான் மேற்படி சொத்தை கிரையம் பெற்ற பிறகு அதன் கிழக்கோட்டில் 10 சென்ட் நிலத்தை விற்பனை செய்தேன் என்றால் சரிதான். மேற்படி நிலம் செக்குபந்தி கண்டு விற்பனை செய்யப்பட்டது. மேற்படி நிலம் விவசாய நிலமாக விற்பனை செய்யப்பட்டதா அல்லது மனையிடமாக விற்பனை செய்யப்பட்டதா என்றால் அது எனக்கு நினைவில்லை. மேற்படி இடத்தை நான் மகாலட்சுமி நகர் எக்ஸ்டென்ஷன் என்று மனை இடமாக பிரித்து விற்று விட்டேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி மனை இடத்திற்கு ரோடு மற்றும் பூங்கா என இடங்களை ஒதுக்கி விற்பனை செய்தேன் என்று சொன்னால் சரியல்ல மனை இடமாகத்தான் கொடுத்தேன். நான் விற்பனை செய்த வா.சா.ஆ–4 ஆவணத்தில் மேற்படி சாலை மற்றும் பூங்கா இடங்களை குறிப்பிட்டு விற்பனை செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

3. நான் படியூர் கிராமத்தின் பஞ்சாயத்து தலைவராக 10 வருடங்களாக இருக்கிறேன். வழக்கு சொத்தை கிரையம் செய்தபோது நான் பஞ்சாயத்து

தலைவராக இருந்தேன் என்றால் சரிதான். வாதி கிரையம் செய்த அசல் ஆவணங்களை நான் பார்த்தேனா என்றால் இல்லை அது என்னிடமும் இல்லை என்று சொன்னால் சரிதான். நான் எனக்கு சொத்தை விற்ற 1–ம் பிரதிவாதியிடம் தாவா சொத்தின் மூல ஆவணங்களை வழக்குக்கு பின்னிட்டாவது பெற்று சரிபார்த்தேனா என்றால் இல்லை. 1 ஏக்கரா நிலத்தை நான் கிரயம் பெற்று அதில் 10 சென்ட் நிலத்தை விற்ற பிறகு 90 சென்ட் என்னுடைய அனுபவத்தில் உள்ளது என்று சொன்னால் சரிதான். தற்போது மேற்படி பூமி எந்த பட்டா எண்ணில் உள்ளது என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.10 ன்படி பட்டா எண் 3555 இல் மொத்த விஸ்தீரணம் ஒரு ஏக்கர் 6 சென்ட் என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அது தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஒரு ஏக்கர் 6 சென்ட் நிலத்தில் எனக்கு 90 சென்ட் தான் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மீதம் இருக்கிற நிலம் எனக்கு பாத்தியப்பட்டதில்லை என்றால் அங்கு மீதம் எந்த நிலமும் இல்லை பட்டா தவறாக உள்ளது. நான் கூறுவது தவறு என்றாலும் உண்மையில் அளந்து பார்த்தால் மீத நிலம் அங்கு இருக்கும் என்று சொன்னால் சரியல்ல. க.சா.எண். 394/2 நிலத்தை எப்போது உட்பிரிவு செய்தார்கள் என்று விவரம் எனக்கு தெரியாது. நான் கூறுவது தவறு என்றாலும் நான் தான் மனு கொடுத்து மேற்படி பூமியை உட்பிரிவு செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி உட்பிரிவில் நான் விற்ற நிலத்தையும் என்னுடைய பூமியையும் தனித்தனியாக உட்பிரிவு செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு உட்பிரிவு செய்த போது யாருக்கும் அறிவிப்புக் கொடுக்காமல் அதிகார பலத்தை பயன்படுத்தி உட்பிரிவு செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

4. வாதியை எப்போதாவது நேரிலோ அல்லது ஃபோன் மூலமா பேசி உள்ளேனா என்றால் அவரை நான் பார்த்ததில்லை. கிராம நிர்வாக அலுவலர் அல்லது நில அளவிரோ தாவா சொத்தை அளக்க வேண்டும் என்று ஏதேனும் அறிவிப்பு கொடுத்தார்களா என்றால் இல்லை. வாதி பலமுறை சொத்தை அளப்பதற்கு மனு கொடுத்து அதை நான் தடுத்துள்ளேன் என்று சொன்னால்

சரியல்ல. என்னுடைய சொத்திற்கு மேற்கு புறம் வாதிக்கு சொத்து உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் உத்தமி என்பவர் இருக்கிறார். வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு வாதிக்கு மேற்படி இடத்தில் எவ்வளவு நிலம் உள்ளது என்பதை நான் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. வாதி மேற்படி இடத்தில் தனக்கு பாத்தியப்பட்ட 2.06 ஏக்கர் நிலத்தில் எனக்கு ஒரு ஏக்கர் நிலமும் அதன் பின்னிட்டு ஒரு 50 சென்ட் அதன் பிறகு 36 சென்ட் நிலமும் விற்பனை செய்துள்ளார் என்றாலும் அதை தவிர 20 சென்ட் நிலம் அவர் அனுபவத்தில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ–10 ன்படி எனக்கும் வாதிக்கும் மட்டும்தான் மேற்படி சர்வே எண்ணில் நிலம் உள்ளது என்றாலும் வேறு யாருக்கும் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல. எனக்கு வாதி செக்குபந்தி குறிப்பிட்டு நிலம் விற்பனை செய்திருந்தாலும் பட்டாவில் என்னுடைய பெயரும் கூட்டாக இருப்பதால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை பொருத்த பட்டா கூட்டு பட்டாவாக இருப்பதால் அதை பயன்படுத்தி வாதி தாவா சொத்தை அளப்பதை என்னுடைய அதிகாரத்தை பயன்படுத்தி அளக்கவிடாமல் தடுக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய எதிர்வழக்குரையில் வாதி தன்னுடைய பெயரை தாவா சொத்தின் பட்டாவில் தவறுதலாக சேர்த்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல அவரது பெயர் தவறுதலாக இருக்கிறது என்று குறிப்பிட்டுள்ளேன். அவரது பெயரை நீக்குவதற்கு நான் இதுவரையில் ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை.

5. நான் வாங்கிய சொத்தில் 90 சென்ட் நிலத்தை மட்டும்தான் நான் அனுபவம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். உண்மையில் மேற்படி இடத்தில் ஒரு ஏக்கர் ஆறு சென்ட் நிலம் உள்ளது என்றாலும் வாதியின் நிலத்தையும் சேர்த்து நான் அனுபவம் செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய கிரைய ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள விஸ்தீரணத்தை விட கூடுதலாக அனுபவம் செய்ய எனக்கு எந்த விதமான உரிமையும் இல்லை

என்று சொன்னால் நான் ஆவணத்தில் இருப்பதைத்தான் அனுபவம் செய்து வருகிறேன். எனக்கு 1–ம் பிரதிவாதி நிலத்தை விற்பனை செய்த போது வாதி 1–ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்த ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளவாறு தான் நிறுத்திக் கொண்ட நிலத்திற்கு கிழக்கு பக்கம் என குறிப்பிட்டு விற்பனை செய்துள்ளார் என்று சொன்னால் சரிதான். மேற்படி செக்குபந்தின் படி என்னுடைய நிலத்திற்கு மேற்கு புறம் வாதி நிலம் இருந்தது என்று சொன்னால் சரிதான். வாதி, 4, 6, 7, 8 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுக்கும்போது தான் நிறுத்திக்கொண்ட நிலத்திற்கு மேற்கு என குறிப்பிடுவதற்கு பதிலாக சண்முகசுந்தரம் பாத்தியப்பட்ட பூமிக்கு மேற்கு எனக் குறிப்பிட்டு தவறுதலாக விற்பனை செய்த விபரம் எனக்கு தெரியுமா என்று சொன்னால் அது சரியாகத்தான் குறிப்பிட்டு விற்பனை செய்துள்ளார். வாதிக்கு மேற்படி க.சா. எண்ணில் இன்னும் 20 சென்ட் நிலம் உள்ளது என்றாலும் அதைஅளந்து பார்த்தால் தெரிந்து விடும் என்பதால் அதை அளப்பதற்கு நான் தடை செய்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் அசல் ஆவணம் வாதி என்னிடம் விற்பனை செய்த தாவா சொத்தின் மூல ஆவணம் என்று சொன்னால் சரிதான் **அது வா.சா.ஆ.13.** மேற்படி கா.சா.எண்ணில் வாதிக்கு மீதம் உள்ள நிலம் உள்ள காரணத்தினால் தான் அதன் அசல் ஆவணம் அவரது பாதுகாப்பில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.02.09 19:57:39 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.